Registered as a Newspaper

A L ZOOLOGY
நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும்
திரு. K. சிவபாதம் B.Sc, (Hons)
ஆரம்பம்:
11 - 1 - 1986
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்
விலை ரூ-1/=
உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

A/L வகுப்புகளுடன்
O/L 9, 5, 6, 7, 8ம் 1, 2, 3, 4ம் வகுப்புகளும்
ஆரம்பம்:
14 - 1 - 1986
Bond Institutes
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன வரு மார்கழி மீ 28 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி ஆகிர் பிறை 30 (12-01-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-47

தொண்டா-லலித்-டிக்ஸிற் முத்தரப்புப் பேச்சு

குடியுரிமை, இனப்பிரச்சினை, பிரார்த்தனை விவகாரங்கள் நீண்ட நேரம் ஆராய்வு

கொழும்பு, ஜன. 12

இந்தியா சென்று திரும்பிய கிராமக் கைத்தொழில் அபிவிருத்தித் துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி, இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஆகியோர் நேற்று முத்தரப்ப[illegible] பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஒப்பந்தத்தின் கீழ் மலையகத் தமிழருக்கு இந்தியக் குடியுரிமை வழங்குதல், ஒப்பந்தத்துக்கு அப்பாற்பட்டு மலையகத் தமிழருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவது, இ. தொ. கா. வின் பிரார்த்தனை ஆகிய விடயங்கள் இப்பேச்சுக்களின் போது முக்கியமாக ஆராயப்பட்டன.

இந்தியா சென்றிருந்த அமைச்சர் தொண்டமான் வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு திரும்பியிருந்தார். அவர் இன்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத் முதலியைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது திரு. தொண்டமான் இந்தியாவில் பிரதமர் ராஜீவ் காந்தியுடனும், மற்றும் இந்திய அதிகாரிகளுடனும் தாம் பேசியது குறித்து திரு. அத்துலத் முதலிக்கு எடுத்து விளக்கி பெறுபேறுகளை விவரித்தார்.

இந்தியா வந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் கௌரவத்துடன் கண்ணியமாகத் தாயகம் திரும்பும் நிலைமை ஏற்பட்டால் மட்டுமே இந்தியக் குடியுரிமை

(4ம் பக்கம் பார்க்க)

அடகு நகைபற்றி நேற்றும் பேசினர்

வடபகுதி மக்கள்வங்கி அடகுநகைகள் குறித்து மக்கள் வங்கிகளின் பாதுகாப்பு உயர் அதிகாரி திரு. ஸ்ரான்லி சேனநாயக்கா பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினர்.

எனினும் நகைகளை மீள ஒப்படைப்புதுக்கான திகதிபற்றி நேற்றைய சந்திப்பிலும் முடிவு செய்யப்படவில்லை.

மட்டக்களப்பில்

சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணாரத்ன நேற்று மட்டக்களப்புக்கு விஜயஞ் செய்தார்.

அரசாங்க அதிபர் திரு [illegible]ம். அந்தோனிமுத்துவையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் அவர் மாநாடு ஒன்றில் சந்தித்து வெள்ள நிலைமை குறித்து அறிந்து கொண்டார்.

கோட்டை : சூழவுள்ள வீதிகளுக்கு மூடுவிழா

யயழ்ப்பாணம்,ஜன 12

யாழ்ப்பாணம்கோட்டையைச் சூழவுள்ள முக்கிய வீதிகள் அடுத்த சில தினங்களுக்குள் மூடப்படலாம்.

இவற்றை மூடுவது குறித்து நேற்று கொழும்பில் நடந்த பாதுகாப்பு அமைச்சு மாநாட்டில் ஆராயப்பட்டது.

யாழ். கோட்டையின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக எடுக்கப்பட உள்ள மற்றும் ஒரு நடவடிக்கை இதுவாகும்.

கோட்டையைச் சூழவுள்ள வீதிகளில் உள்ள பெரிய மரங்களை வெட்ட ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கண்ணி வெடிகளைக் கண்டுபிடிக்கக் கூடிய நவீன இயந்திரங்களை யாழ்ப்பாணத்துக்கு அவசரமாய் அனுப்புவது குறித்தும் நேற்றைய மாநாட்டில் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணம் சுங்க உதவி கலெக்டர் கணேஷ் காலமானுர்

நாளை இறுதிச் சடங்குகள்

யாழ்ப்பாணம், ஜன. 12

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆயுதப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான யாழ் சுங்க உதவி கலெக்டர் திரு. செல்லையா கணேஷ் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை கொழும்புபெரியாஸ்பத்திரியில் மரணமானர்.

அவருக்கு வயது 47. 4 பிள்ளைகளின் தந்தை. ஒரு மகனும் ஒரு மகளும்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்.

யாழ் சுங்கஉதவிகலெக்டராக பதவிஏற்கும் முன்னர் திரு கணேஷ், திருகோணமலையில் உதவி அரசாங்க அதிபர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பதவிகளை வகித்தார்.

1981 இல் யாழ் நகரில் இடம் பெற்ற வன்செயல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க அரசு, லயனல் பெர்னாண்டோ தலைமையில் நியமித்த கமிட்டியன செயலாளராகவும் திரு. கணேஷ் பணியாற்றினார்.

லண்டன் பி. ஏ. பட்டதாரியான இவர், மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை திங்கள் காலை செம்மணி மயானத்தில் நடைபெறுகின்றன.

கொழும்பில் இருந்து அவரது பூதவுடலை விமான மூலம் யாழ்ப்பாணம் கொண்டு வர ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆணையாளர் இரங்கல் செய்தி

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணத்தில் சுங்க உதவிக் கலெக்டராகப்பணியாற்றிய திரு. கணேஷ் எம்மைவிட்டுப் பிரிந்து விட்டார்.

பதவியிலிருந்த போதே அவர் மரணமாக நேர்ந்தது நமது மனங்களைப் பிழியும் சோகச் சம்பவமாகும்.

அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு உதாரண புருஷராக விளங்கிய கணேஷின் மரணம் அரசாங்க ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் தாங்கிக் கொள்ள முடியாத பேரதிர்ச்சி ஆகும்.

மேற்கண்டவாறுயாழ். மாநகரஆணையாளர்திரு. சி. வி. கே. சிவஞானம் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

முச்சந்திமுரளி

ஓ. அதுவும் மெத்த நல்லதுதான். எங்கடை சனம் வீணு அந்த ரோட்டுகளாலை விஷயம் தெரியாமல் போய் சண்டபடி சூடு வாங்கிச் சாகாமல் காப்பாற்ற உது நல்ல வழிதான்!

அவை தங்களுக்குப் பாதுகாப்புக்கு எண்டு செய்யிறது இப்பிடியாவது எங்களுக்குப் பயன் பட்டேன்.

சுபநேரம்
12 - 01 - 1986
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்
9.33 முதல் 11-03 வரை
ராகு காலம்
5 03 முதல் 6-33வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இலங்கை மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு ஸ்பெயின் மாநாடும் கண்டனம்

மாட்றிட், ஜன. 11

இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துவருவது குறித்து ஸ்பெயின் நாட்டில் நடந்த லிபரல் இன்டர் நாஷனல் அமைப்பு மாநாட்டில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

நாடு தழுவிய ரீதியிலான அர்த்தம் உள்ள அதிகாரப் பரவலாக்கல் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும்படி அந்த மாநாட்டில இலங்கை அரசுக்குக் கோரிக்கை விடப்பட்டது.

பன்னிரண்டு அம்சங்கள் கொண்ட இத்தீர்மானத்தை சுவிஸ்நாட்டு லிபரல் கட்சி கொண்டு வந்தது.

இத்தீர்மானத்தைஆதரித்த உலக அரசியல் கட்சிகள் வருமாறு:

அமெரிக்க ஜனநாயகக் கட்சி.

ஜெர்மனி சுதந்திர ஜனநாயகக் கட்சி,

பிரெஞ்சு ஜனநாயகக் கட்சி,

கனடா லிபரல் கட்சி

இம்மாநாட்டில்கலந்து கொண்டு ஆதரித்த உலகப்பிரமுகர்கள் வருமாறு:

பிரெஞ்சுநாட்டு முன்னாள் ஜனாதிபதி ஜிஸ்காட் டிஈஸ் – டெயின், பிரிட்டிஷ் லிபரல் கட்சித் தலைவர்திரு டேவிட் ஸ்ரீல், மேற்கு ஜெர்மன் பொருளாதார அமைச்சர் மார்ட்டின் ஹங்மன், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முன்னாள் தலைவர் திரு. சைமன் வீல் ஆகியோர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முழுவாசகமும் வருமாறு:

1. இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுதல், வன்செயல்கள் அதிகரித்

(4ம் பக்கம் பார்க்க)

தொண்டமாறு துப்பாக்கிப் பிரயோகத்தில் காயம் அடைந்த கதிரவேலு செல்வராஜா (வயது 60) யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்பு எடுக்கப்பட்ட படம்.

அப்பாவி தமிழரை கொல்லாதீர்

எம். ஜி. ஆர்.,கருணாநிதி ஜே. ஆருக்குத் தந்தி

சென்னை, ஜன. 11

''அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை நிறுத்துங்கள்''.

தமிழ் நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும், தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை தனித்தனி தந்திகள்மூலம் மேற்கண்டவாறு கேட்டுள்ளனர்.

வடபகுதியில் சமீபத்தில் நடந்த தாக்குதல் சம்பவங்கள் குறித்து தந்திகளில் கவலையும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கைச் சம்பவங்களால் தமிழ்நாட்டில் உருவாகிவரும் கொந்தளிப்பு நிலைமைகள் குறித்தும் தந்திகளில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

திருமலையில் நத்தார் பயங்கரம் ஞாபகமிருக்கிறதா?

ஊர்காவல் படை வீரர் ஐவரும் 24 வரை விளக்க மறியலில்

திருகோணமலை, ஜன 12

நத்தார் தினத்தன்று இரவு மூதூரில் தமிழ் இளம் பெண்கள் இருவரை மானபங்கம் செய்ததுடன் ஒருவரைச் சுட்டுக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக ஐந்து முஸ்லிம் ஊர்காவல் படை வீரர்கள் ஜனவரி 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

ஐந்து சந்தேக நபர்களையும் மூதூர்ப் பொலீஸார், நேற்று மூதூர் நீதிவான் திரு. கே. கதிரவேற்பிள்ளை முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

டிசம்பர் 27-ஆம் திகதி தொடக்கம் 5 சந்தேக நபர்களும் திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் தேசிய பாதுகாப்புப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத் தப்பட்டனர்.

நேற்று முன்தினம் 5 சந்தேக நபர்களும் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களின் பெயர்கள் வருமாறு;

1. கே. எம். நவாஸ், மூதூர் 2. எம். ஜலால்தீன், தோப்பூர் 3. ஜே. ஏ. மஜுப், மூதூர் 4. எம் மௌசூர், மூதூர் 5.எம் ஜே. ஆரிப் மூதூர்.

இச்சம்பவம் தொடர்பாக கொழும்பு கிருள்ள வீதியில் தலைமையகத்தைக் கொண்ட 'சமாதானம் கோரும் பெண்கள் இயக்கம்' அறிக்கை ஒன்றை விடுத்து இருக்கின்றது.

''இவ்வாறான அட்டூழியங்கள் இனிமேலும் நடைபெறுது இருக்க

(4ம் பக்கம் பார்க்க)

மூதூர், சேருவில பகுதிகளிலும் மழை

திருகோணமலை,ஜன. 12

கடும் மழை காரணமாக மூதூர், சேருவில பகுதிகளில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

சேருவில கிராமத்தில் அகதி முகாம் ஒன்றின் கூரை மழைக்கு பெயர்ந்து விழுந்ததில் 6 அகதிகள் காயமடைந்தனர்.

அல்லை–கந்தளாய் வீதியின் ஒருபகுதி, வெள்ளத்தினுல் அடித்துச் செல்லப்பட்டது.

அகதிகள் நிவாரணம் இரு வாரங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு

யாழ்ப்பாணம், ஜன.12

வடபகுதியில் உள்ள தமிழ் அகதிகளுக்கு அரச நிவாரணம் வழங்கப்படுவது, இரு வாரங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்படுகின்றது.

தமிழ் அகதிகளுக்கு ஒரேயடியாக நிவாரணம் வழங்க அரசாங்கம் முடிவு எடுக்காததே இதற்குக் காரணமாகும்.

இப்பொழுது நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஜனவரி 15ஆம் திகதிக்குப் பின்னர் இது மீளாய்வு செய்யப்படும்.

பெரும்பாலும் நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குண்டுகளை வெடித்து தோழர்களுக்கு அஞ்சலி

அரியாலையில் கடந்த மாதம் மரணமான தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நேற்று இரவு குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன.

கழக உறுப்பினர்கள் மூவர் கொல்லப்பட்டு ஒரு மாத காலம் பூர்த்தியானதை ஒட்டி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கில் காற்றுடன் கடும் மழை

யாழ்ப்பாணம், ஜன. 12

நேற்று வடபகுதியில் காற்றுடன் கூடிய கடும் மழை பெய்தது.

இதன் காரணமாக யாழ் நகரில் மின்சாரத் தடை சில இடங்களில் ஏற்பட்டது;

தொலைபேசிகளும் பல இடங்களில் பழுதடைந்தன.

தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டது.

சனநடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

தனியார் பஸ் சேவைகள் குறைந்த அளவிலேயே இடம்பெற்றன.

மக்களின் அன்றாட வாழ்க்கை ஸ்தம்பித்தது.

யாழ்நகரில் பஸ் நிலையம், வண்ணை வரதராஜப் பெருமாள் கோயில் முதலிய இடங்களில் வீதிகள் மேலாக வெள்ளம் பாய்ந்தது.

மீண்டும் பெருவெள்ளம் வரப்போகுதோ என்று தாழ்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் பயந்தனர்.

சந்தைகளில் பொருள்கள் அதிக அளவில் விற்பனைக்கு வரவில்லை அதனுல் பொருள்களின் விலைகளில் 'சூடு' தெரிந்தது.

பெரும்பாலான கடைகள் திறக்கப்படவில்லை.

தமிழ்ப் படவுலகின் சென்ற வருட சாதனை!

1985 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில்167 தமிழ்ப்படங்கள் தயாரிக்கப்பட்டன. 1984 இல் 143 தமிழ்ப்படங்களே தயாரிக்கப்பட்டிருந்தன.

1984 இல் 26 படங்கள் தமிழில் டப் செய்யப்பட்டன.

1985 இல் 37 படங்கள் தமிழில் டப்செய்யபபட்டன.

1985 இல் தயாரிக்கப்பட்ட தமிழ்ப்படங்களில் 89 க்கு 'ஏ' சர்டிபிக்கட் வழங்கப்பட்டன.

3டி படங்கள். ஒன்று சினிமாஸ்கோப்.

ஆறு படங்கள் 125 நாட்கள் தொடர்ந்து ஓடின. அவை வருமாறு:

மைடியர் குட்டிச் சாத்தான், தென்றலே என்னைத்தேடு, உதய கீதம், நல்லவனுக்கு நல்லவன், பௌர்ணமி அலைகள், காக்கிச் சட்டை. 13 படங்கள் 100 நாள் ஓடின.

பூவே பூச்சூடவா – இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறது.

4 படங்கள் நண்பகல் காட்சிகளாக 100 தினங்களுக்கு மேலாக ஓடிக்கொண்டிருக்கின்றன.

முன்னணி தயாரிப்பாளர்: தேவர் பிலிம்ஸ் (5 தமிழ், 1 ஹிந்தி)

டைரக்டர் இராம நாராயணன்– 11படங்கள்.

இசையமைப்பாளர்; இளையராஜா –50 படங்கள்.

வசனகர்த்தா: வியட்நாம் வீடு சுந்தரம் – 10 படங்கள்

பாடல்கள்: வாலி– 77 படங்கள்.

முன்னணி கதாநாயகன் சுரேஷ்- 16 படங்கள்.

முன்னணி கதாநாயகி நளினி- – 23 படங்கள்.

துணை நடிகர்: ஜெய்சங்கர் – 21 படங்கள்.

துணைநடிகை; வடிவுக்கரசி – 9 படங்கள்.

நகைச்சுவை நடிகர்: கவுண்டமணி – 34 படங்கள்.

நகைச்சுவை நடிகை மனோரமா – 31 படங்கள்.

கவர்ச்சி நடிகை: அனுராதா 32 படங்கள்.

நீளம் கூடிய படம்; ஒரு கைதியின் டைரி 4,768 மீட்டர்.

நீளம் குறைந்த படம்: தங்கமாமா –

புதிய தயாரிப்பாளர்கள் 47பேர், புதிய இயக்குநர்கள்: 33பேர் புதுமுகங்கள் (நடிக–நடிகை): 14 பேர், புதிய இசையமைப்பாளர்- 3 பேர், புதிய வசனகர்த்தாக்கள்: 20 பேர்.

தினசரி சினிமா

காஸ்ட்ரோ கடுமையான சுகயீனம்?

ஹவானா, ஜன 11

காஸ்ரோவுக்கு கடுமையான சுகயீனம்!

இந்தச்செய்தியை விஷமத்தனமான வதந்தி என கியூபா வெளிநாட்டமைச்சு மறுத்துள்ளது.

சுகயீனம் பற்றிய செய்தி ஹவானாவிலிருந்து எழவில்லை எனவும் மியாமிப் பகுதியிலேயே எழுந்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

பாலர் கலைவிழாவில்

ஆரம்பக் கல்வியின் அவசியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.11

ஆரம்பக் கல்வி ஒரு குழந்தையின் அத்திவாரம். எனவே ஆரம்பக் கல்வியைச் செவ்வனே போதிப்பது அவசியம்.

கரவெட்டி அரசடி பாலர் பாடசாலையில் நடைபெற்ற பாலர் கலைவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. வி. தங்கராசா கலந்து கொண்டார்.

அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திருமதி. பூரணம் பொன்னையா தலைமை வகித்தார்.

திரு. ஏ. வி. தங்கராசா தனது சிறப்புரையில் தொடர்ந்து கூறியதாவது;–

ஆரம்பக் கல்வி செவ்வனே நடைபெறத் தவறும் சூழ்நிலை காரணமாகவே பெரும்பாலும் மாணவர் கல்வியைத் தொடராத சூழ்நிலை உருவாகிறது.

''ஆரம்பக் கல்வியினை வழங்கும்போது, ஆங்கில போதனைக்கும் உரிய இடம் வழங்க வேண்டும்.''

பாலர் பங்குபெறும் பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. திரு. எஸ். பூரணம்பிள்ளை நன்றியுரை கூறினார்.

வெளி உலகில்

பாரத - ஈரான் ஒத்துழைப்பு

தெஹ்ரானில் பேச்சுக்கள் ஆரம்பம்

புதுடில்லி, ஜன. 11

பாரதத்துக்கும் ஈரானுக்கும் இடையேயான உறவு நிலைகளைப் பலப்படுத்தத் திட்டமிடப்பட்டு வருகிறது.

இதன் முன்னோற்பாடாகவே பாரத - ஈரான் கூட்டுக் குழுவின் பேச்சுக்கள் நேற்று தெஹ்ரானில் துவங்கி நடைபெற்று வருகின்றன.

இந்தப் பேச்சுகளுக்கு பாரத வெளியுறவு மந்திரி பல்ராம் பகத்தும் ஈரான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் கூட்டாக தலைமை தாங்குகிறார்கள்.

இரு நாடுகளுக்கும் இடையேயான அக்கறையுள்ள பல விஷயங்களும் மற்றும் சர்வதேசப்பிரச்சினைகளும் பேச்சுவார்த்தைகளில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில் வர்த்தகம், கலாசாரம் மற்றும் விஞ்ஞான ஒத்துழைப்புக்கான துணைக் குழுக்கள் நேற்று முன்தினம் சந்தித்தன.

இந்தச் சந்திப்பில் ஒத்துழைப்புக்கான பல துறைகள் இனங்காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொழில் வர்த்தக, கலாசாரத் துறைகளில் ஒத்துழைப்பை விரைவுபடுத்த ஈரான் அக்கறை காட்டுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

சிறுதொழில்களுக்கான வசதிகளை விரிவுபடுத்தவும் மின்சாரத்துறையை நவீனமயப்படுத்தவும் பாரதத்தின் தொழில் நுட்ப விஞ்ஞான ஒத்துழைப்பை ஈரான் நாடுகிறது.

அத்துடன் ரயில் போக்குவரத்துத் துறையின் அபிவிருத்திக்கும் பாரதத்தின் ஒத்துழைப்பை ஈரான் நாடுவதாகவும் கூறப்படுகிறது.

ஈரான் மன்னர் ஷாவின் காலத்தில் பாரதத்தில் ஈரான் சில முதலீடுகளைச் செய்திருந்தது.

கொமெயனி அரசு வந்த பின் முன்னைய அரசின் திட்டங்களை ஈரான் நிறுத்தி விட்டது.

இதனால் ஈரான் பாரத வர்த்தக உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

இதைச் சீர்செய்வதே இந்தப் பேச்சுக்களின் நோக்கமாகும்.

ரஷ்ய தொடர்பு சாதனங்கள்

உள்நாட்டு அனர்த்தங்களை துணிந்து வெளியிட வேண்டும்

சோவியத் மக்கள் விருப்பம்

மொஸ்கோ. ஜன. 11

ரஷ்யாவில் இடம் பெறும் இயற்கை அழிவுகள் மற்றும் பிரச்சினைகளை ரஷ்யப் பத்திரிகைகள் ஏன் பிரசுரிப்பது இல்லை?

இப்படி கேள்வி எழுப்பும் பல கடிதங்களை ரஷ்ய பத்திரிகையான 'சோவியத்கயா ரொஸியா' பிரசுரித்துள்ளது.

ரஷ்யர்களே இக்கடிதங்களை எழுதியுள்ளனர்.

ரஷ்ய ஒளிபரப்பு, ஒலிபரப்பு நிலையங்களும் இது விஷயத்தில் துணிந்து செயல்பட வேண்டும் என்று சில கடிதங்களில் கோர[illegible] பட்டு உள்ளது.

மெக்ஸிகோ[illegible] நடந்த பூகம்பத்துக்கும் கொலம்பியாவில் நடந்த எரிமலை வெடிப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்த ரஷ்ய பத்திரிகைகள், ரஷ்யாவில் இடம் பெற்ற பூகம்பம் பற்றி அவ்வளவாக பிரசுரிக்காதது ஏன்?

இப்படி கடிதங்களில் கோரப்பட்டுள்ளன.

கைபர் கணவாய்

பழங்குடியினரை காப்பாற்றுங்கள்

ராஜீவிடம் வேண்டுகோள்

மாஸ்கோ, ஜன. 11

பாகிஸ்தான் பிரதேசத்தில் கைபர் கணவாய்ப் பகுதியில் வாழும் அப்ரிடி பழங்குடியினரைக் காப்பாற்றும்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பழங்குடித் தலைவர் ஜனுப் வலிகான் கோசேஹால் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானின் இராணுவ நெருக்குதலில் இருந்து பழங்குடியினரின் அரசியல் சுதந்திரம், பாரம்பரியத்தைப் பாதுகாக்கும்படி இந்தியப் பிரதமரை ஜனுப் வலிகான் கேட்டுள்ளார்.

கைபர் கணவாய்ப் பிரதேசத்தில் இருந்து பாகிஸ்தான் துருப்புக்களை விலக்கிக் கொள்ளச் செய்யும்படியும் ஜனுப் வலிகான் ஐ. நா. சபையையும் வேண்டியுள்ளார்

கைபர் கணவாய்ப் பிரதேசத்தை பாகிஸ்தான் தடை செய்ததுடன் பழங்குடியினரைச் சரணடையச் செய்யுபடி தனது துருபபுக்களையும் அனுப்பி வைத்தது தெரிந்ததே.

இந்திராவுக்கு விருது

புதுடில்லி, ஜன. 11

அமெரிக்காவிலுள்ள சிமிதோனியன் ஆய்வு நிறுவனம் மறைந்த பாரதப் பிரதமர் இந்திராவுக்கு தனது முதலாவது விருதை வழங்கியுள்ளது.

இந்திய இராணுவத்தின் 'ஆந்தைக் கண்' துப்பாக்கி!

டெஹ்ராடுன், ஜன. 11

கும் இருட்டிலும் இனி இந்திய ராணுவம் எதிரியை எதிர்த்துப் போராடும்.

இதற்கான சாதனங்களை உபகரண ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் தயாரித்துள்ளது.

நிலவு வெளிச்சம் கூட இல்லாத இருட்டில் எதிரியை இலக்குத் தவறாது தாக்கக்கூடிய தன்னியக்கத் துவக்கு ஒன்றை நிறுவனம் தயாரித்துள்ளதாக நிறுவன இயக்குநர் டாக்டர் எஸ். ஹருதயநாத் சொன்னார்.

வானில் தெரியும் நட்சத்திரங்களின் துணை கொண்டே நிலையான, அல்லது நடமாடும் உருவங்கள் மீது இத்துப்பாக்கியால் தாக்க முடியும். லேஸர் கதிர் தூரத்தை அளக்கும். கம்யூட்டர் ஒன்று துப்பாக்கி வைக்கப்பட வேண்டிய இலக்கைக் காட்டும். மோட்டர் ஒன்று துப்பாக்கியைத் திருப்பி சுடத்தொடங்கும்.

எல்லாம் வீரர் ஒருவர் ஒரு பொத்தானை அழுத்தியவுடன் தானாக நடக்கும்.

இது தான் அந்த நவீன துப்பாக்கி.

சுவாமி சிவானந்தர் நூற்றாண்டு விழா

மூன்று கோடி ரூபா செலவில் சமூகநல அபிவிருத்தி வேலைகள்

சென்னை, ஜன. 11

சுவாமி சிவானந்த சரஸ்வதியின் நூற்றாண்டு பிறந்ததின விழாவை ஒட்டி 3 கோடி ரூபா (இந்திய நாணயம்) செலவில் சமூக நல அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

சிவானந்தர் பிறந்த இடமான திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பத்தமடை என்னும் இடத்தில் பெரிய ஆஸ்பத்திரி ஒன்று கட்டப்படும்.

சிவானந்தர் நினைவுத் தபால் முத்திரை ஒன்றை மத்திய அரசு வெளியிடும்.

சுவாமி சிவானந்தரினால் ஆரம்பிக்கப்பட்ட திவ்யஜீவன சங்கம், நூற்றாண்டு பிறந்ததின விழாவை ஒட்டி, பாதயாத்திரை ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

இன்ரர்சிட்டி ரயிலை கொடிகாமத்திலும் நிறுத்தக் கோரிக்கை

கொடிகாமம், ஜன 12

இன்ரர்சிட்டி ரயில் கொடிகாமத்திலும் நிறுத்தப்படவேண்டும்.

வடமராட்சி, தென்மராட்சி, பளைப் பகுதி மக்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ரயில் வடபகுதியில் யாழ்ப்பாணத்தில் மட்டும் தற்போது நிறுத்தப்படுவதால் பெரும்பாலும் வடமராட்சிப் பயணிகளுக்கு கூடுதலான பணவிரயமும், நேரவிரயமும் அலைச்சலும் நேருகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காப்பாற்ற சென்றவர்கள் கைது!

கொழும்பு, ஜன.12

வெள்ளத்தில் சிக்கிய கிராமவாசிகளைக் காப்பாற்றச்சென்ற இளைஞர்களை ஆயுதப்படையினர் வெள்ளியன்று கைது செய்தனர்.

மட்டக்களப்பு கல்லாறுப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

15 இளைஞர்கள் இப்படிக் கைது செய்யப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் மலேரியா காய்ச்சல்

கிளிநொச்சி, ஜன. 12

கிளிநொச்சியில் வயோதிபர் முதல் குழந்தைகள் வரை மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு மூளைக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட இருவர் மரணமாகி உள்ளனர்.

தற்போதைய காலநிலை காரணமாக 25க்குமேற்பட்ட குழந்தைகள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலருக்கு மூளைக்காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியில் கடந்த பல மாதங்களாக நுளம்பின் தொல்லை அதிகரித்துள்ளதே மலேரியா நோய்க்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட மக்கள் பலர் குடும்பம் குடும்பமாக வைத்தியசாலைக்குப் படை எடுத்த வண்ணம் உள்ளனர்.

இதேவேளை இங்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஒன்றேயுள்ளது. போதிய மருந்து வசதி கிடையாது. தனிப்பட்ட வைத்தியசாலைகளும் இங்கு போதியளவு இல்லை.

இம்மாவட்ட மக்கள் பெரிதும் கஷ்ட நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

தீயினால் ஏற்பட்ட அழிவுக்கு நஷ்டஈடு கோரி காப்புறுதி

கூட்டுத்தாபனத்துக்கு எதிராக வழக்கு

நாகர்கோவில், ஜன. 12

தீயினால் ஏற்பட்ட அழிவுக்கு மூன்று லட்சம் ரூபா நஷ்டஈடு தரத் தவறியமைக்காக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக பருத்தித்துறை வர்த்தகர் ஒருவர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்.

பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள இராகுலசூரியன் புடவை விற்பனை நிலைய உரிமையாளர் திரு. என். சச்சிதானந்தம் என்பவரே இந்த வழக்கை தாக்கல் செய்தவராவார்.

மனுதாரரின் சார்பில் சட்டத்தரணி திரு கே. முத்துக்குமாரு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்தார்.

1984ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி இந்த விற்பனை நிலையம் தீக்கிரையானதாகவும்—

இந்தக் கடைக்கு தீயினால் ஏற்படும் அழிவுகளுக்கு மூன்றரை லட்சம் ரூபா காப்புறுதி செய்திருந்தும் அந்த நஷ்டஈட்டுத் தொகையைத் தருவதற்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தவறிவிட்டது என்றும் மனுதாரர் தமது மனுவில் தெரிவித்திருக்கிறார்.

மேற்படி மூன்றரை லட்சம் ரூபா நஷ்டஈட்டுத் தொகையையும்—

1984 செப்டெம்பர் முதல் திகதியிலிருந்து அதற்கான வட்டியையும்- செலுத்துமாறு காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கு உத்தரவிடுமாறு மனுவில் கோரப்பட்டிருக்கிறது.

விடைத் தாள்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணத்தில் திருத்தப்பட்ட ஜீ. சீ. ஈ. விடைத்தாள்கள் செவ்வாய்க்கிழமை யாழ் தேவி மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டன.

யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை இத்தகவலை உதயனிடம் வெளியிட்டார்.

1056 ஆசிரியர்கள் 88 குழுக்களாக இவ்விடைத்தாள் திருத்தப் பணியில் ஈடுபட்டு இருந்தார்கள்.

இவர்கள் சனி, ஞாயிறு தினங்கள் உட்பட 12 நாட்கள் இப்பணியைச் செய்தார்கள்.

இந்த விடைத்தாள் திருத்தப் பணிகள் யாழ் இந்துக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் மகாவித்தியாலயம் ஆகிய நான்கு நிலையங்களில் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பன்றிகளுக்கு வந்திருக்கும் கோபம்

அம்பாறை ஜன 12

வெள்ளப் பெருக்கினால் காட்டை விட்டு வெளியேறிய பன்றிகள் நகரினுள் புகுந்து பொதுமக்களைத் தாக்குகின்றன.

இப்படிச் சம்பவங்கள் நிந்தவூரில நேற்றுத் தொடர்ந்து நடந்தன.

பன்றிகளினால் தாக்கப்பட்ட ஆறு பொது மக்கள் ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தத் தாக்குதல் சம்பவங்களினால் மிரண்டு போயிருக்கும் அப்பகுதி மக்கள் பன்றிகளை வேட்டையாட தடிகள், பொல்லுகள் சகிதம் எந்நேரமும் தயாராக இருக்கிறார்களாம்.

பயிற்சியாளர்

காங்கேசன்துறை, ஜன. 12

மாவிட்டபுரம் லயன்ஸ் கழக தையற் பயிற்சி நிலையத்தின் [illegible] பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக வெளியீடுகள் வெளிவாரி மாணவர்களுக்கும் பயன்தர வேண்டும்

நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ் பல்கலைக் கழக செயற்பாடுகளும் வெளியீடுகளும் வெறுமனே உள்ள மாணவர்களுக்கு மட்டுமன்றி புறத்தே உள்ள வெளிவாரி மாணவர் குழாத்துக்கும் பயன்தரவேண்டும.

''விமான ஒளிப்பட விளக்கங்களுக்கான மூலாதாரங்கள்'' என்ற நூல் வெளியீட்டு விழா கைலாசபதி அரங்கில் வெள்ளிமாலை நடைபெற்றது.

நூலாசிரியரும், புவியியல துறை விரிவுரையாளருமான திரு. எஸ். டி. பி. இராஜேஸ்வரன் தனது பதிலுரையில்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

துணை வேந்தர் பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் முதல் பிரதியை கலைப்பீடாதிபதி திரு. என். பாலகிருஷ்ணனிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

[illegible] தலைவர் திரு. எஸ். பாலச்சந்திரன் நூலை வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர். மதனாகரன் தமது நூலாய்வுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:–

இலங்கையிலே விமான ஒளிப்பட ஆய்வுகள் 1954 ஆம் ஆண்டு வரைக்கும் மேற்கொள்ளப்படவில்லை. கனேடிய அரசாங்கத்தின் உதவியுடன் இம்முயற்சிகள் முதன் முதலில் மேற்கொள்ளப்பட்டன.

1956 ஆம் ஆண்டிலே தான் முதன் முதலாக முழு இலங்கையும் விமான ஒளிப்படமாக எடுக்கப்பட்டது.

யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பித்து பத்தாண்டுகள் ஆகியும், புவியியல் துறையில் ஒரு விரிவுரையாளர் வெளியிடும் முதல் நூல் இதுவாகும்.

விமான ஒளிப்படத் துறையில் தமிழில் வெளிவரும் முதல் நூலும் இதுவாகும்.

அழகு தமிழ் நடையில், பெரும்பாலும் தமிழ் கலைச் சொற்களைப் பெய்து தவிர்க்க முடியாத இடத்து ஆங்கிலக் கலைச் சொற்களைக் கையாண்டு தமது நூலை எழுதியுள்ளார் திரு. இராஜேஸ்வரன்.

அடுத்துப் பேசிய புவியியல் துறை விரிவுரையாளர் திரு. கே. எம். புவனேஸ்வரன் கூறியதாவது:–

தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் புவியியல் சம்பந்தமான தமிழ் நூல்கள் எமது மாணவர்களுக்குப் பொருத்தமாக இல்லை.

தமிழ் நாட்டு பேராசிரியர்கள் கையாளும் கலைச் சொற்கள் எமக்கு ஏற்புடைத்தாக இல்லை. அவர்களின் தமிழ் நடையும் நமக்குப் புதிது. எனவே நம்நாட்டு விரிவுரையாளர்கள்இவ்வாறு நூல்கள் வெளியிடுவது அவசியம்.

இப்படி அவர் கூறினார்.

தமிழ் துறை விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராசா, மெய்யியல் துறைத் தலைவர் கலாநிதி சோ கிருஷ்ணராசா ஆகியோர் உட்படப் பலரும் கருத்துரை வழங்கினர்.

வடபகுதி வாசிக்கு செவன பரிசு

கொழும்பு, ஜன.12

செவன பரிசுத்திட்டத்தில் வடபகுதி வாசி ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபா கிடைத்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பரிசு பெற்றவரின் பெயர் வெளியிடப்படமாட்டாது என்று கட்டடப்பொருள் கூட்டுதாபனத் தலைவர் திரு. அஜந்தா விஜேசேன தெரிவித்தார்.

பிரதமர் திரு. பிரேமதாஸாவே, பரிசு பெற்றவரிடம் காசோலையை வழங்கவிருக்கின்றார்.

வடபகுதி வாசி ஒருவருக்குச் செவன பரிசு கிடைத்தது குறித்து கூட்டுத்தாபன வட்டாரங்களில் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

உதய சங்கற்பம்

ஜெருசலமே! உன் துக்க உடைகளையும், துயரோலத்தையும் உரிந்துபோடு; கடவுள் உனக்கு அருளும் முடிவில்லா மகிமை உன்னை அழகு செய்யட்டும். ஆண்டவர் உனக்கு அருளும் நீதியை ஆடையாய் உடுத்துக்கொள்; நித்தியமானவரின் மகிமையை மணிமுடியாய் அணிந்து கொள். (பாரூக் 51: 2)

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல 15, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805
22073
12-01 86 ச. பெ. 23

பல்கலைக்கழக மாணவருக்கு சொந்த விடுதி வசதி தேவை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு நியாயமான வாடகையுடன் தங்குமிடவசதி கிடைக்க இருக்கிறது பல்கலைக்கழகச் சுற்றுடலில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள் மாணவருக்கு உதவ முன் வந்திருக்கிறார்கள்.

இது கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியான செய்தி மாணவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ் மாணவரின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ள சமூக நலன் விரும்பிகளுக்கும் தான்.

தமிழ் மாணவரின் உயர் கல்விக்கு தோன்றாத் துணையாக இருக்கும் ஒரே ஒரு கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மட்டுமே.

தமிழ் மாணவர்கள் புறக்கணிப்பு எதுவும் இல்லாமல், தாழ்வு மனப்பான்மை இல்லாமல், பெரும்பான்மை இன மாணவர்களைப் போலவே சகல வசதிகளுடனும் கொழும்பில் அல்லது பேராதனையில் அல்லது கட்டுபெத்தையில் உயர்கல்வி பெற்ற காலம் ஒன்று இருந்தது உண்மை தான்.

இப்போது அதனைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாது மேலே சொன்ன இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர் கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும் இருந்து படிக்கக்கூடிய சூழ்நிலை இப்போது இல்லை.

தமிழ் மாணவர் மனச் சஞ்சலம் இல்லாமல், சரிவரக் கவனம் செலுத்தி உயர் கல்வி பயிலக்கூடிய வாய்ப்பும் வசதியும் யாழ்ப்பாணத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை. மட்டக்களப்பில் பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்று இருந்தபோதிலும் அதனைப் பூரணத்துவம் வாய்ந்த சகல துறைக் கல்வி வசதியும் கொண்ட நிறுவனமாகக் கருத முடியவில்லை.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் குடா நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இப்போதுள்ள நெருக்கடி மிக்க சூழ்நிலையில் மாணவர்கள் தினமும் தூர இடங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்து போவது பெரும் சிரமமாகும். போக்குவரத்துச் சேவைகள் சீராக இல்லை. பஸ் தரிப்புகளில் காத்துக் கிடப்பதோடும், வாகனங்களுக்குள் இடிபட்டு வருவதோடும் மாணவரின் தெம்பும் புத்துணர்ச்சியும் கரைந்து போய்விடும். அதற்குப் பிறகு அவர்கள் பாடத்தைச் சரிவரக் கிரகிக்கக்கூடிய நிலையில் இருக்கமாட்டார்கள்.

குடா நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கே இக்கஷ்டம் என்றால் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் நிலை எவ்வாறு இருக்கும்? அவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அணித்தாக உள்ள இடங்களில் இருப்பதுதான் எல்லா வகையாலும் உகந்தது; சிறந்தது.

உயர் கல்வி கற்பவர்கள் எல்லோரும் பண வசதி படைத்தவர்கள் அல்லர். அதனால் எல்லா மாணவர்களும் அதிக வாடகை கொடுத்து குடியிருக்க இயலாது அவர்களுக்கு உதவும் விதத்தில் நியாய வாடகையில் தமது வீடுகளைக் கொடுக்க வந்த மக்கள் அனைவரையும் பாராட்டுகிறோம்.

அவர்கள் பல்கலைக்கழக மாணவர்களின் பலவித கஷ்டங்களை நீக்கி, படிப்பில் கூடுதல் அக்கறை செலுத்த வகை செய்திருக்கிறார்கள். இதுவும் ஒருவகைக்கல்வித்தானமே. ஆகையால் கல்வித்தானம் செய்த புண்ணியம் அவர்களுக்குக் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

எனினும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தானே சொந்தத்தில் மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து கொடுக்க முயல வேண்டும். அரசாங்கம் நிதிவசதி தரப் பின் நின்றாலும் சமூக, தொண்டர் ஸ்தாபனங்களின் அல்லது கொடைவள்ளல்களின் உதவியுடன் விடுதிகளைக் கட்டுவது குறித்து ஆலோசிக்கலாம் அல்லவா?

லீவு எடுக்காமல் ஆசிரியர் சாதனை

யாழ்ப்பாணம் ஜன, 12

நவாலி மகாவித்தியாலய அதிபரும் இரு ஆசிரியர்களும் கடந்த கல்வி ஆண்டில் தமது சொந்த விடுமுறைகளை எடுக்காமல் சாதனை நிலைநாட்டி உள்ளனர்.

நவாலி மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். கதிர்காமத்தம்பி சென்ற கல்வி ஆண்டில் ஒரு நாள் மட்டுமே விடுமுறை எடுத்துள்ளார்.

ஏனைய இரு ஆசிரியர்களும் சென்ற ஆண்டில் ஒரு நாள் தானும் விடுமுறை எடுக்கவில்லை. திரு. எஸ். செல்லையா, திருமதி. ஆர். இராசரத்தினம் ஆகிய இரு உதவி ஆசிரியர்களே விடுமுறை எடுக்காதவர்கள்.

ஆசிரியர் திரு. எஸ். செல்லையா தனது அறுபதாவது வயதிலே அதுவும் தான் ஓய்வுபெறும் ஆண்டில் இவ்வாறு சாதனை ஏற்படுத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசு வந்ததன் இரண்டு நோக்கங்கள்

ஞானக்கதிர்

மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை அழிக்கவும் அல்லது சக்தியற்றவனாய் மாற்றவும், மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்களை விடுதலை பண்ணவும் இயேசு வந்தார்.

நாம் பயப்படும்படி அடிமைத்தனத்தின் ஆவி நமக்குக் கொடுக்கப்படவில்லை.

பயம் அடிமைத்தனத்தை உருவாக்கும்.

அடிமைத்தனத்தின் வல்லமையை ஒழிக்கவே இயேசு வந்தார்.

எப்படி?

பயத்தின் வல்லமையை நிறுத்திவிட்டபடியினாலே அப்படியாகும். தேவனுக்கு மகிமை உண்டாகட்டும்.

மரணத்திலுள்ள எல்லா சாபங்களையும் ஒரே சமயத்தில் முறியடிக்க இயேசு நியாயப் பிரமாணத்தின் எல்லா சாபங்களையும் ஆவியிலும், சரீரத்திலும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

கல்வாரிச் சிலுவையில் சரீரத்தில் இயேசு எல்லா சாபங்களையும் ஏற்றுக் கொண்டார்.

அந்தச் சமயத்தில் இயேசுவை அழிக்கும்படியாகப் பாதாளத்தின் எல்லாப் பிசாசுகளும் எதிர் வந்தன.

அப்படி இயேசுவை அழித்து விட்டால் சாத்தான் எந்தவிதத் தொந்தரவும் இல்லாமல் பூமியில் ஆட்சி செய்யலாம் என்று நினைத்தான்.

ஆனால் தேவனோ இயேசுவின் மரணத்தின் மூலம் மரணத்துக்கு அதிபதியாகிய பிசாசை வெல்லும்படி திட்டம் வைத்திருந்தார்.

பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை தமது மரணத்தின் மூலம் செலுத்தி இயேசு ஜெயித்தார்.

அதன் பிறகு தேவன் ஜீவ சுவாசத்தை இயேசுவுக்குள் உண்டாக்கி ஆவியின் பிரமாணமாகிய ஜீவன் இப்பூமியில் கிரியை செய்யும்படி செய்தார்.

அதன் மூலம் நீங்களும், நானும் சுதந்திரமாக வாழவே அவர் அப்படிச் செய்தார்.

பாவத்தின் பிரமாணமாகிய மரணம் நம்மை ஆண்டுகொள்ளும் வரை நமக்கு ஆவியின் பிரமாணமாகிய ஜீவனைக் குறித்து அறிய முடியாது.

ஆவியின் பிரமாணமாகிய ஜீவன் நமக்குக் கிடைக்க வேண்டுமானால் நாம் செய்ய வேண்டிய காரியம் ஒன்று உண்டு.

அது மறுபடியும் பிறத்தல் ஆகும்.

ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று இயேசு நிக்கொதேமுவிடம் சொன்னார்.

நிக்கொதேமு யூதருக்குள்ளே சிறந்த போதகர். சிறந்த அறிவாளி உயர்ந்த பதவியிலிருந்தவர்.

ஆனால் இவைகளெல்லாம் அவரை மறுபடியும் பிறக்கும் அனுபவத்திற்குள் கொண்டு வரவில்லை.

இதே காரியத்தைத் தான் பெந்தகொஸ்தே நாளின் போது பேதுரு பிரசங்கம் செய்தார்.

பிரசங்கத்தைக் கேட்ட யாவரும் இருதயத்தில் குத்துண்டவர்களாய், ''சகோதரர்களே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்றார்கள்.

அதற்குப் பேதுரு, ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று சொன்னார்.

அப்படிக் கீழ்ப்படிந்தவர்கள் பாவத்தின் பிரமாணமாகிய மரணத்திலிருந்து விடுபட்டு, ஆவியின் பிரமாணமாகிய ஜீவனைப் பெற்றுக் கொண்டார்கள்

ஆம், ஞானஸ்நானத்தின் மூலம் தங்கள் பாவ சரீரத்தை அடக்கம் செய்து விட்டனர்.

மேலே எழுந்ததும் பரிசுத்த ஆவியின் மூலம் ஜீவனைப் பெற்றுக்கொண்டனர்.

அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் பயமுள்ள ஆவியை எடுத்து விட்டு பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுக்கிறார்.

ஆம், அவர்கள் பயம் நீங்கி சமாதானம் பெற்றனர்.

நீங்கள் தேவனுடைய வசனத்துக்குக் கீழ்ப்படிந்து மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று' பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டால் பயம் நீங்கி சமாதானம் பெறலாம்.

தேவ சமாதானத்தைப் பெற வேறு வழி எதுவும் கிடையாது.

இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தைப் பெற தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக.

மரணமும் ஜீவனும்

ரோமர் 8:2 இல் மரணமும், ஜீவனும் கிரியை செய்யும் இரண்டு விதமான ஆவிக்குரிய பிரமாணங்களைக் காண்கிறோம்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் இரண்டு விதமான பிரமாணங்களையும், அவைகளின் விளைவுகளையும் காணமுடியும்.

அவைகள் ஒன்றுக்கொன்று எதிர்மாறானவைகள்.

இரண்டிற்கும் இடையிலுள்ள சுவரை இயேசு மாத்திரமே தாண்டி வந்திருக்கிறார்.

ஆம், நம்முடைய எல்லா சாபங்களிலிருந்தும் மீட்கும்படியாய்த் தம்மைத்தாமே நமக்காக ஒப்புக் கொடுத்த நேரத்திலே அப்படிச்செய்தார்.

இயேசு செலுத்தின கிரயம் இருவகையானது.

பிசாசின் கிரியைகளை அழிப்பதற்கு மட்டும் இயேசு வராமல், மரணத்திலிருந்தும், அது கொண்டு வரும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்கவுமே வந்தார்.

எபி 2:14,15 இல்''ஆதலால் பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார்.

மரணத்துக்கு அதிபதியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்'' என்று வாசிக்கிறோம்.

நன்றி - பவர்லைன்ஸ்

பொய்யாமொழி



குறள்:
இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

பொருள்:
அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்கின்றவன் வாழ முயல்கின்ற பல திறத்தாரிலும் மேம்பட்டு விளங்குகின்றவன் ஆவான்.

ஊறணியில் துப்பாக்கி பிரயோகம்

காங்கேசன்துறை, ஜன. 12

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இராணுவத்தைக் கண்டவுடன் மோட்டார் சைக்கிளைப் போட்டு விட்டு ஓடவே இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பலாலியிலிருந்து இரு லொறிகளில் பொருள்களுடன் இராணுவத்தினர் நடைபவனியாக காங்கேசன்துறை நோக்கி வந்து கொண்டிருந்த சமயம் ஊறணியில் இச் சம்பவம் நடந்தது.

வாலிபர்கள் விட்டுச் சென்ற மோட்டார் சைக்கிளைச் சேதப்படுத்தியபின் இராணுவத்தினர் காங்கேசன் துறையைச் சென்றடைந்தனர்

துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக ஊறணி பகுதியில் சில மணி நேரம் பரபரப்பும் பதற்றமும் நிலவின.

77க்கு பின் ஆயுதப்படையினர் தமிழருக்கு எதிராக பகிரங்கமாக செயற்பட தொடங்கினர்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகள் அடங்கிய திட்டத்தின் ஐந்தாவது பகுதி இன்று பிரசுரமாகிறது.

மாற்று யோசனையில் கூட்டணி குற்றச்சாட்டு

இணைப்பு 2

பொலிஸ், உள்நாட்டு
சட்டம், ஒழுங்கு

1950 க்கு முந்திய ஆண்டுகளில் தீவின் பொலீஸ் சேவையில் குறிப்பிடத்தக்க அளவு தமிழர் பணியாற்றினர்.

உதவி பொலீஸ் அதிபர் பதவிக்கு நேரடியாக நியமனம் நடந்தது குறிப்பிடத்தக்க அளவு தமிழர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டனர்.

தமிழ் பொலீஸ் அதிகாரிகள் கணிசமான அளவு இருந்தனர்.

அதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலீஸ் நிலையங்களில அவர்கள் நியமிக்கப்பட்டனர்.

மேலதிகமானவர்கள் தோட்டப்பகுதி பொலீஸ் நிலையங்களிலும் நியமிக்கபபட்டனர்.

தமிழ்ப் பகுதிகளில் சட்டம், ஒழுங்கு பராமரிப்பதில் அத்தமிழ் அதிகாரிகள் தவறவில்லை.

அரசியல் சிக்கல், பொதுசன எழுச்சி [illegible] யன இடம்பெற்ற பொழுது தமிழ்ப் பொலீஸார் அமைதியையும் சட்டத்தையும் நிலைநாட்ட கடுமையாகப் பாடுபட்டனர்.

தேவை ஏற்பட்ட சமயங்களில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தயங்கவில்லை.

பொலீஸ் சேவையில் அரசியல் புகுந்தது

1950க்குப் பின்னர் தெளிவான மாற்றம் ஒன்று பொலீஸ் சேவையில் ஏற்பட்டது பொலீஸ் சேவையில் அரசியல் புகுந்தது. பொலீஸ் நியமனங்களில் அரசியல், இனரீதியான சிபார்சுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

பொலீஸ் சேவையில் கீழ்மட்டத்தில் இருந்து உயர் மட்டம் வரை தமிழர் நியமனம் பெறுவது குறைந்தது.

1980 ஆம் ஆண்டில் பொலீஸ் சேவையில் 5 சத வீதமே தமிழர்கள் இருந்தனர். ஆயுதபபடைகளில் 2 சதவீதமே இருந்தனர்.

[illegible] மங்கள் தமிழர்களைப் [illegible] பொலீஸாரின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

சிங்களவர், தமிழர் என்ற பாகுபாடின்றி பொலீஸார் நடுநிலைமையுடன் நடக்கத் தவறினர். பொலீஸாரின் நடத்தையில் வீழ்ச்சியும் ஏற்பட்ட .

தமிழருக்கு எதிராக, சிங்களவருக்கு ஆதரவாக பொலீஸார் செயல்பட்டனர்.

1977 ஆகஸ்டில் பொலீஸார் தமிழருக்கு எதிராகப் பகிரங்கமாகச் செயல்பட்டனர். யாழ்ப்பாணத்தில் தமிழர்களைத் தாக்கினர். தமிழரைச் சுட்டுக் கொன்றனர். யாழ்ப்பாணம் சந்தையை எரித்தனர். வர்த்தக நிலையங்களை எரித்தனர்.

தமிழர்களைக் கொல்லவும் அவர்களின் உடைமைகளை அழிக்கவும் நாட்டின் மற்றப் பகுதிகளில் உள்ள சிங்களவர்களை பொலீஸார் தூண்டினர்.

இதன் பின்னர் பொலீஸாரும் ஆயுதப்படையினரும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களைக் கொல்வதிலும் [illegible] பெண்களை மானபங்கம் செய்வதிலும் அடிக்கடி ஈடுபட்டனர்.

பல கோடிக்கணக்கான தமிழரின் உடைமைகள் கொள்ளையிடப்பட்டன.

90.000 நூல்களுடன் யாழ்ப்பாணம் நூல் நிலையம் எரிக்கப்பட்டது. பத்திரிகைக் காரியாலயங்கள், அச்சகங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், கட்சிக் காரியாலயங்கள் எரிக்கப்பட்டன.

வீடுகளுக்குள் வைத்து தமிழர்கள் கொல்லப்பட்டனர் வீதிகளில் வைத்துக் கொல்லப்பட்டனர்.

1983 ஜூலையில் ஒரு நாள் 53 அப்பாவித் தமிழர் கொல்லப்பட்டனர். இது எல்லாம் பொலீஸ்– ஆயுதப்படையினரின் செயல்களாகும்.

நன்கொடை

விசுவமடு, ஜன. 12

அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு முரசுமோட்டைப் பகுதிக்கு வந்து தங்கியிருக்கும் அகதிகளுக்கு முரசுமோட்டை மிஷன் வைத்தியசாலை நிர்வாகத்தினர் சுமார் 7,500 ரூபா பெறுமதியான உடைகளை வழங்கினர்.

25 குடும்பங்களுக்கு தலா ரூபா 300 பெறுமதியான உடைகள் வழங்கப்பட்டன.

விவேகானந்தரும் பெண் சீடர்களும்

குமாரி ஜோசப்பைன் மாக்சிலியாட் என்ற அமெரிக்கப் பெண் நியூயோர்க் நகரில் விவேகானந்தருக்கு அறிமுகமானவர். சுவாமிஜி இந்தியாவுக்குத்திருப்பியபிறகு இந்தப் பெண்ணும் தான் இந்தியா வர விழைவதாகத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினர். அதன் பிறந இந்தியாவுக்கும் வந்தார்.

சுவாமிஜியின் சீடராகிட ஆன்மீகத்துறையில் பயிற்சியும் பெற்று தேவைப்படுபோது பொருள் உதவியும் செய்தார்.

300 டாலர் கொடுத்து ''உத்போதன்'' என்ற பெயரில் வங்க மொழியில் பத்திரிகை நடத்தவும் ஏற்பாடு செய்தார். தனது ஆயுள் முழுவதும் சுவாமிஜியின் சீடராகவே இருந்தார்.

மார்காட்நோபில் லண்டனைச் சேர்ந்த பெண்மணி. சுவாமிஜியைப் பெரிதும் கவர்ந்தார்.

அந்தப் பெண்மணியின் கல்வி, அறிவு, ஆன்மீகத்தில் உண்மையிலேயே அவருக்கு இருந்த ஆர்வம், அன்பு உள்ளம், பெண் குலத்துக்குச் சேவை செய்யும் பெருந்தன்மை ஆகியவை விவேகானந்தரைப் பெரிதும் கவர்ந்தன.

தான் தொடங்கியுள்ள ஆத்மீகப்பணிக்கு இப்படியொரு பெண் சீடரும் தனக்குத் தேவைதான் என்று அவர் எண்ணினார்.

இது தொடர்பாக 1897ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி அந்த அம்மையாருக்கு இந்தியாவிலிருந்து அஞ்சலும் அனுப்பினர். அந்தப் பெண்ணும் 1898 ஜனவரி 28இல் இந்தியாவுக்குவந்து சுவாமிஜியை சந்தித்தார்.

மார்காட் நோபில் பிரம்மச்சரிய விரதத்தை மேற்கொண்டு ''நிவேதிதை'' என்று சுவாமிஜிடம் நாமமும்பெற்று சீடரும் ஆனார். இந்த நிவேதிதாதே பிறகு அன்னை சாரதாமணி தேவியின் ஆசிர்வாதத்துடன் பெண்களுக்கு ஆகப் பள்ளியொன்று திறந்து கல்விப்பணியை ஆர்வத்தோடு நடத்தினார்.

ஆதாரம்: மங்கை
தொகுப்பு: க. கனகராசா

இன்று 12ஆம் திகதி சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினம் ஆகும். இதனை முன்னிட்டு இந்தக்கட்டுரை பிரசுரமாகிறது.

நயினாதீவு இளைஞன் கைதாகி விடுதலை

கிளிநொச்சி, ஜன. 12

நயினாதீவு இளைஞன் கிளிநொச்சியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டார்.

கிருஷ்ணபிள்ளை– தயாபரன் என்ற இளைஞனே விடுதலை செய்யப்பட்டவராவர்.

கடந்த சில நாட்களின் முன்னர் மோட்டார் கார் ஒன்றில் கிளிநொச்சியிலிருந்து கனகபுரம் பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர் வீதியில் நின்ற இந்த இளைஞனைக் கைது செய்தனர்.

கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவினர் எடுத்த நடவடிக்கையினைத் தொடர்ந்து இளைஞன் மீதான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு இளைஞன் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெற்காணி மேட்டுக்காணி இடாப்புகள்

யாழ்ப்பாணம், ஜன, 12

பூநகரி, மட்டுவில்நாடு பகுதிகளின் 1986 ஆம் ஆண்டுக்கான நெற்காணி, மேட்டுக்காணி இடாப்புக்களை ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை விவசாயிகள் பார்வையிடலாம்.

இப்படி மட்டுவில்நாடு பயிர்ச்செய்கை அதிகாரி திரு. எஸ். ரி. மயில்வாகனம் அறிவித்துள்ளார்.

பூநகரி கமநலசேவை நிலையம், மட்டுவில்நாடு பயிர்ச்செய்கை அலுவலகம் ஆகியவற்றிலும் இடாப்புக்களைப் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாகக் காணி பதிவு செய்தல், திருத்தம் செய்தல் ஆகியவையும் இக்காலத்தினுள் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி, ஜன. 12

தேசிய முன்னேற்றத்திற்கான நோய்த்தடுப்பு முறைகள் பற்றிய பயிற்சி வகுப்புக்களை சுகாதாரத் திணைக்களம் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் அங்கு கடமையாற்றும் மருத்துவ மாதுக்களுக்கு வழங்கி வருகிறது.

DIPLOMA IN COMPUTER
PROGRAMMING
WEEKEND-COURSE (6 Months)
BASIC LANGUAGE
ஆரம்பம்: 25 - 1 - 86
கட்டணம், ரூ. 1500/-
60 மணித்தியாலங்களுக்குக் குறையாத
PRACTICALS
CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA. T'Phone: 24201

உதயன்
12-01-1986

TOEFL
Date of Exam: 8-3-86
Course begins on: 11 1-86
Course Fees: Rs. 250
Lecturer: Mr. KANDIAH NAVERENDRAN
CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA. T'Phone :24201

இடதுசாரி இயக்க அபிமானிகளுக்கு உத்தியோகம் இல்லையா?

ஜனநாயக உரிமைகள் இயக்கம் கண்டனம்

கொழும்பு, ஜன. 12

தீவிர இடதுசாரிக் கொள்கைகளுடன் தொடர்புள்ள பட்டதாரிகள், உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய அத்தகைய மாணவர்கள் அபிமானிகளுக்கு அரச உத்தியோகம் வழங்கப்படமாட்டாது என்ற அமைச்சரின் அறிவிப்பு, பேச்சு, எழுத்து, அரசியல் சுதந்திரங்களைப் பறிக்கும் செயலாகும்.

இலங்கை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம் மேற்கண்டவாறு கண்டித்து உள்ளது.

இதுசம்பந்தமாக இயக்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அரச பதவிகளுக்கு நியமனங்கள் செய்யப்படும்போது விண்ணப்பஞ் செய்யும் பட்டதாரிகள் மற்றும் இளைஞர்கள் தீவிர இடதுசாரி இயக்கங்களுடன் தொடர்பு உள்ளவர்களா என்று பார்த்துத்தான் நியமனம் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்கா கூறியிருந்தார்.

இதைத் தொடர்ந்தே இலங்கை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம் இந்தஅறிக்கையை வெளியிட்டது.

அந்த அறிக்கை வருமாறு:

அரச உத்தியோகம் கோரி விண்ணப்பிப்பவர்கள் அரசாங்கத்தினால் கடுமையாகச் சோதனை செய்யப்படுவர்.

'அவர்கள்பற்றிய இரகசிய அறிக்கைகள் பெறப்படும். தீவிர இடதுசாரி அமைப்புகளுடன் தொடர்புள்ளவர்கள் என்று கண்டுபிடிக்கப்படுபவர்களுக்கு அரசு உத்தியோகம் வழங்காது — இப்படி ஓர் அரசாங்க அமைச்சர் கூறியதாக செய்தி வந்துள்ளது.

எமது இயக்கம் அமைச்சரின் கூற்றை நம்பவில்லை. அமைச்சரின் கூற்றுக்கு அரசு ஆதரவோ என்ற ஐயமும் எழுகின்றது.

ஆகவே அரசாங்கம் தனக்கும் அந்தக் கூற்றுக்கும் தொடர்பு இல்லை என்பதைத் தெளிவாக்க வேண்டும்.

அதன்மூலம் நாட்டில் பேச்சு, எழுத்துச் சுதந்திரங்களைப் பேணிப் பாதுகாக்க அரசு முன்வரவேண்டும் —

இப்படி ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கத்தின் செயலாளர் திரு. டெஸ்மண்ட் பெர்னாண்டோ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜன 12

நேற்று முன் தினம் காலை தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சுற்றுடலில் இடம்பெற் துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் காயமடைந்தவர்களில் மேலும் இரண்டு பேர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நேற்றுக் காலை சேர்க்கப்பட்டனர்.

இச் சம்பவத்தில் இரண்டு பேர் மரணமானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இரண்டு பேர்களின் பெயர்கள் வருமாறு;

1. சந்தையா பிரேம்குமார், வயது 19 தொண்டமானாறு வாசி. இடதுகையில் காயமடைந்தார்.

2. சோமசுந்தரம் திலீபன், வயது 20. மாணவன். கட்டுவன் வடக்கு வாசி.

முல்லைத்தீவு மோதல்:

தமக்கு சேதம் எதுவும் இல்லை என்று புலிகள் அறிக்கை

சென்னை, ஜன. 11

கடந்த வெள்ளிக்கிழமை காலை முல்லைத்தீவு, உடையார்கட்டுப் பகுதியில் ஆயுதப் படையினருடன் நேரடி மோதலில் ஈடுபட்ட போது தமது பக்கத்தில் உயிர்ச்சேதம் எதுவும் இல்லை என்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்திருக்கிறது.

சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இச்சமரில் விடுதலைப் புலிகளில் மூன்றுபேருக்கு சிறு காயங்கள் மட்டுமே ஏற்பட்டன. ஆயுதப் படையினரில்குறைந்தது 8 பேர்கள் இறந்து இருக்கலாம்.

ஆயுதப்படையினரால் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவித் தமிழ் மக்கள் தான்.

ஐந்து ஹெலிக்கொப்டர்கள்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் முகாமைத் தாக்க ஐந்து ஹெலிக்கொப்டர்கள் பாவிக்கப்பட்டன.

காலையில் இருந்து 3மணி நேரமாக நடந்த இந்த நேரடிச் சமரில் எமது முகாமை ஆயுதப் படையினரால் ஒன்றும் செய்ய முடியாது போயிற்று.

நாமும் ராக்கட்லோஞ்சர்கள், மோட்டார்குண்டுகள் முதலியவற்றையும் பாவித்தோம். எமது ஆயுதம் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இந்த நேரடிச் சமரைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களின் வீடுகளை எரித்தனர். பலரைக் கைதுசெய்தனர்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தொண்டா-லலித்-டிக்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

பெற்ற மலையகத் தமிழர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளும் என்று பிரதமர் காந்தி நிபந்தனை விதித்திருந்தார் அல்லவா?

அந்தப் போக்கை மாற்றுமாறு கேட்டுத்தாம் பிரதமர் ராஜீவுடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றியும், இனப்பிரச்சினை சம்பந்தமாக இந்தியப் பிரதமருடனும் மற்றும் அதிகாரிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்தும் திரு தொண்டமான் அமைச்சர் லலித்துக்கு எடுத்துரைத்தார்.

அதன் பின்னர் இ. தொ.கா.வின் பிரார்த்தனைத் திட்டம் குறித்தும் இருவரும் விவாதித்தனர். பிரார்த்தனைத் திட்டத்தைக் கைவிடுமாறு அமைச்சர் லலித் கேட்டுக் கொண்டதாக அறியவருகிறது.

சற்று நேரத்தின் பின்னர் இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார்.

ஒப்பந்தத்தின் கீழ் இந்தியக் குடியுரிமை வழங்கப்படவேண்டிய மலையகத் தமிழருக்கு அது வழங்கப்படும். ஒப்பந்த உறுதிமொழியை இந்திய அரசு மீறாது. ஆனால் எப்போது அதனைச் செய்யும் என்பதனைச் சொல்லமுடியாது— என்றவாறு திரு. டிக்ஸிற் இருவருக்கும் எடுத்துரைத்தார் என அறியவருகிறது.

முத்தரப்புப் பேச்சு திருப்திகரமாக நடந்ததாக அமைச்சர் லலித் கருத்து வெளியிட்டார். திரு. தொண்டமானும் அனேகமாக அவ்வாறே தெரிவித்தார்.

எனினும் இ தொ.கா.வின் பிரார்த்தனைத் திட்டத்தில் இதுவரை மாற்றம் எதுவும் இல்லை என்று நேற்றுப் பிற்பகலில் இ. தொ. கா. வட்டாரங்கள் தகவல் தந்தன.

கிளிநொச்சி பிரசைகள் குழுவின் அளப்பரிய பணிகள்

கிளை அங்குரார்ப்பண கூட்டத்தில் உரை

கிளிநொச்சி, ஜன. 12

கிளிநொச்சி பிரசைகள் குழு பாதிக்கப்பட்ட மக்களுக்காக தன்னாலான சேவைகளைச் செய்ய என்றும் பின்னின்றதில்லை இன்று மக்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

ஆதலால், பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்பதற்கும் உண்மை நிலையை அறிந்து நேர்மையான வழியில் நின்று உழைப்பதற்குமே கிராமசேவகர் பிரிவு தோறும்ஒவ்வொரு கிளையை நிறுவப் பிரசைகள் குழு முடிவு செய்தது.

கிளிநொச்சிப் பிரசைகள் குழுவின் முதலாவது கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துத் தலைமையுரை நிகழ்த்திய டாக்டர். கே. சுப்பையா தமது உரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முரசுமோட்டை ஊரியான் கிராம சேவகர் பிரிவுக்கான கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் முருகானந்த மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சிக் குழுவின் தலைவர் டாக்டர் கே. சுப்பையா தலைமையில் நடைபெற்றது.

வைபவத்தில் கிளிநொச்சிக் குழுத் தலைவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்த இன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. தமிழ் மக்கள் படும் இன்னல்களைக்களையவும் இராணுவக் கெடுபிடிகளை மட்டுப்படுத்தவும் [illegible] குழுக்கள் அவசியமாகின்றன.

இப்படி அவர் கூறினர்.

கிளிநொச்சிக் குழுவின் உபதலைவர் டாக்டர் கே. திருலோகமூர்த்தி உரை நிகழ்த்துகையில் கடந்த காலங்களில் கிளிநொச்சி பிரசைகள் குழு எமது மாவட்ட மக்களுக்கு சகல துறைகளிலும் சேவையாற்றியுள்ளது.

முழங்காவில், விஸ்வமடு, பாரதிபுரம், பிரமந்தனாறு, திருநகர் முதலான இடங்களில் நடைபெற்ற வன்முறைகள் பற்றி போதிய ஆதாரங்களுடன் பிரசைகள்குழு தகவல் கொடுத்தது என்று கூறினர்.

பிரசைகள் குழுவின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பவை. ஜெயபாலன், ஆசிரியர் வி கே. பரஞ்சோதி.முரசுமோட்டைக் கிளைக் குழுவின் புதிய தலைவர் ஐ நடராசா, செயலாளர் [illegible]பிள்ளை உபதலைவர் மு கந்தசாமி [illegible] உட்பட பலர் உரையாற்றினர்.

ராஜீவ் அபிப்பிராயம் தெரிவிக்க மறுப்பு

டாக்டர் சுப்பிரமணிய சுவாமி வெளியிட்ட கருத்துப் பற்றி

சென்னை, ஜன. 11

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து லோக்தள் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி வெளியிட்ட தீவிரமான கருத்துக்கள் குறித்து அபிப்பிராயம் வெளியிட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மறுத்து விட்டார்.

கடந்த வாரம் தமிழ்நாடு வந்து இருந்த சமயம் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தி செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்பொழுது ஒரு செய்தியாளர், டாக்டர் சுப்பிரமணிய சுவாமியின் கருத்துக்கள் குறித்து அபிப்பிராயம் கேட்டார்.

''இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா பாராமுகமாக இருந்து வருகின்றது. உலகில் தனது 'இமேஜ்' பெருக்குவதில் தான் இந்தியாவுக்கு அக்கறை.

''இலங்கைக்கு அமெரிக்கா, இஸ்ரவேல், பாகிஸ்தான் ஆயுதஉதவி வழங்குகின்றன.

''3000 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அமெரிக்கத் தளமான டியோகாகார்சியாவினால் இந்தியாவுக்கு ஆபத்து உண்டு.

''இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சரியான தீர்வு காணாவிட்டால் அந்த ஆபத்து 25கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இராமேஸ்வரத்துக்கு வந்துவிடும்.

''இஸ்ரவேல், பாகிஸ்தான், அமெரிக்கா எல்லாம் தலையிடும்போது, இந்தியா ஏன் இலங்கைத் தமிழரை அழிவில் இருந்து காப்பாற்ற இராணுவ ரீதியில் தலையிடக்கூடாது?''—

இப்படி டாக்டர் சுப்பிரமணிய சுவாமி பேட்டி ஒன்றில் தெரிவித்து இருந்தார்.

இக்கருத்துக்கள் பற்றிய பிரதமர் ராஜீவ் காந்தி அபிப்பிராயம் எதுவும் தெரிவிக்க மறுத்தார்.

உங்களால் முடியும்

ஒரு பகுதியை நிர்வகிக்கக் கூடிய பொறுப்பு, ஆற்றல், திறமை உங்களிடம் இருந்தால் நீங்கள் விண்ணப்பிக்கலாம். தகைமைகள்: எதனையும் செய்து முடிப்பேன் என்ற உறுதிப்பாடும் மனோ வலிமையும் அத்துடன் தமிழ், ஆங்கில தட்டச்சு அனுபவம், ஆங்கிலத்திலும் தமிழிலும் சுயமாகவே கடிதத் தொடர்பு கொள்ளக்கூடிய ஆற்றல், ஆகக் குறைந்தது ஐந்து வருட அனுபவம்—அச்சக அனுபவம் விரும்பத்தக்கது. எழுத்து மூலம் எதிர்பார்க்கும் படியையும் குறிப்பிட்டு சான்றிதழ்களுடன் 15-1-86ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

மே/பா- "உதயன்",
யாழ்ப்பாணம்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 12-01-1986.

விளையாட்டரங்கு

மூன்று நாடுகள் உலக கிண்ணப் போட்டி

இந்திய அணி வென்றது

முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்துக்கு தோல்வி

பிறிஸ்பேர்ன், ஜன. 12

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் மூன்று நாடுகள் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதல் சுற்று ஒட்டத்தில் இந்திய அணி நியூஸிலாந்து அணியை ஐந்து விக்கெட்டுகளினால் தோற்கடித்தது.

இந்திய, நியூஸிலாந்து ஆஸ்திரேலிய அணிகள் இந்த மும்முனைப் போட்டியில் பங்குபற்றுகின்றன. இந்த தொடர் போட்டி ஆஸ்திரேலியாவில் நடக்கிறது.

இந்தச் சுற்றுப்போட்டியில் முதலில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் ஐந்து சுற்று ஆட்டங்களில் மோதும்.

அவற்றிலிருந்து புள்ளி அடிப்படையில் இறுதி ஆட்டத்திற்கு இரண்டு அணிகள் தெரிவு செய்யப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இரு அணிகளும் இறுதிச் சுற்றின் மூன்று ஆட்டங்களில் மோதும். அவற்றிலிருந்து சாம்பியன் அணி தெரிவு செய்யப்படும்.

முதல் சுற்றின் முதல் ஆட்டம் கடந்த வியாழக்கிழமை ஆஸ்திரேலிய, நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

காலநிலை காரணமாக அந்த ஆட்டம் குழம்பியது அதனால் போட்டி வெற்றி தோல்வியின்றி "டிராவில்" முடிவடைந்தது.

நேற்று இந்திய – ஆஸ்திரேலிய அணிகள் மோதின.

இந்த ஆட்டம் ஆஸ்திரேலியாவில் பிறிஸ்பேர்ன் நகரில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி ஒதுக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 259 ஓட்டங்களை எடுத்தது.

மார்ட்டின் குரோ 75, ஆர். எட்கார் 72 ஓட்டங்களைப் பெற்றனர்.

நியூஸிலாந்துக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியா துடுப்பெடுத்தாடியது.

தேவைப்பட்ட ஓட்டங்களை 5 விக்கெட் இழப்புக்கு பெற்ற இந்திய அணி, அதனால் ஆட்டத்தில் 5 விக்கெட்டுக்களினால் வெற்றியீட்டியது.

இந்திய வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு ஆட்டம் நிறுத்தப்பட்ட போது இந்திய அணி 5 விக்கெட் இழப்புக்கு 263 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்திய தரப்பில் சிறிகாந்த் 50, மொகிந்தர் அமரநாத் 61, கபில்தேவ் 54, ரவிசாஸ்திரி 40, சுனில் கவாஸ்கர் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கை மனித உரிமை...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தல், மிதவாத ஜனநாயகக்கொள்கைகளை உதாசீனஞ்செய்தல் ஆகியவற்றைக் கண்டிக்கின்றது.

2 இனப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வுஒன்று காணப்படுவதற்கு இவை முட்டுக்கட்டையாக இருக்கின்றன.

3 வன்செயல்கள் அதிகரிப்பதும் சமூகத்தில் ஸ்திரமின்மை நிலவுவதும் தீவின்பொருளாதாரத்தைச் சீர்குலைக்கச் செய்வதும் அல்லாது, மிதவாதக் கொள்கைகளையே அழிப்பதாக அமைந்துள்ளது என்று மாநாடு கருதுகின்றது.

4. பொதுத் தேர்தலை மேலும் 6 ஆண்டுகள் ஒத்திப்போட்டது இலங்கை மக்களை அரசியல் நடைமுறையில் இருந்து அப்புறப்படுத்தி வைத்த செயலாக இமமாநாடு கருதுகின்றது.

5. அதிகாரங்கள் ஓர் இடத்தில் குவிக்கப்படுவதால் ஒரு சர்வாதிகார சூழ்நிலை உருவாக வழிவகுத்துள்ளது. இது தற்போதைய பிரச்சினைகளுக்கு ஏற்கக்கூடிய தீர்வு காணுவதைத் தடுப்பதாக அமைந்துள்ளது என்று மாநாடு கருதுகின்றது.

6. நாடு தழுவிய அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கல் ஒன்றே இனப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியது என்று மாநாடு கருதுகின்றது.

7 இலங்கை தமிழ்நாடு ஆகிய இடங்களில் உள்ள தமிழ் அகதிகளுக்கு நல்ல பாதுகாப்பு மற்றும் வசதிகளைச் செய்து கொடுக்கும்படி இலங்கை, இந்திய அரசாங்கங்களைக் கேட்டுக் கொள்வதுடன், ஐக்கியநாடுகள் அகதிகள் ஆணையாளரையும் இம் மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

8. இலங்கை இனப் பிரச்சினைக்கு அமைதியான நிரந்தரத் தீர்வு காணுவதற்குத் தேவையான ராஜதந்திர நடவடிக்கைகளை எடுக்கும்படியும் இலங்கையில் தாராளக்கொள்கை நிலவுவதை உறுதிசெய்யும்படியும் ஐ. நா சபையில் உள்ள உறுப்பு நாடுகளுக்கு இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கின்றது.

9. உடனடியாகப் பொதுத்தேர்தல் ஒன்றை வைத்து இலங்கையின் அரசியல் நடைமுறையை சட்ட பூர்வமாக்குவதுடன் அதன்மூலம் எல்லாத்தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நீதியான தீர்வு ஒன்றைக் காணும்படி இலங்கை அரசை இம்மாநாடு கோருகின்றது.

10. குடியுரிமை பாதிக்கப்பட்ட தனியார்கள், தடை செய்யப்பட்ட அமைப்புக்களுக்கு அவை மீண்டும் வழங்கப்பட வேண்டும் என்று இம் மாநாடு கோருகின்றது.

11. இலங்கையில் அமைதி மீண்டும் நிலவ, தாராளக் கொள்கை அமுலாக லிபரல் இன்டர் நேஷனல் உறுப்பினர்கள் தங்கள் நாட்டு அரசாங்கங்களை வற்புறுத்தவேண்டும்.

12. யுத்தநிறுத்தத்தை நீடித்து பேச்சுக்கள்மூலம் இனப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண இலங்கை அரசாங்கமும் தமிழர் அமைப்புக்களும் முன்வரவேண்டும் என்று இம்மாநாடு கோருகின்றது.

கைதடி சாராயவடிசாலை விறகு கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன 12

கைதடியில் உள்ள சாராய வடிசாலை வளவுக்குள் இருந்த விறகுகளை இனந்தெரியாத நபர்கள் கடந்த 7ஆம் திகதி இரவு கொள்ளை இட்டனர்

ஊர்காவல்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்''

''மூதூர்ச் சம்பவங்கள் தொடர்பாக தேசியப் பாதுகாப்பு அமைச்சர், ஊர்காவல் படைக்குப் பொறுப்பான அமைச்சர் ஆகியோர் விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டும்.

''நாட்டில் சட்டமும் ஒழுங்கும் தகுதியற்ற நபர்கள் ஆயுதம் ஏந்துவதால் சீர் குலைவது கவலை தருகின்றது.''

இப்படி 'சமாதானம் கோரும் பெண்கள் இயக்கம்' விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நீத்தார் பட்டியல்

திரு. செல்லையா கணேஷ்

(யாழ் மாவட்ட மேலதிக சுங்க இறங்குதுறை அளவையாளர் - உதவி சுங்க சேகரிப்பாளர்)

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இல: 136, கச்சேரி – நல்லூர் வீதியில் வசிப்பவருமாகிய திரு. செல்லையா கணேஷ் (யாழ் மாவட்ட மேலதிக சுங்க இறங்குதுறை அளவையாளர் – உதவி சுங்க சேகரிப்பாளர்) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா தம்பதிகளின் ஏக புத்திரனும்—

புலோலி மேற்கைச் சேர்ந்த கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளரான திருமலரின் அன்புக் கணவரும் —

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் செல்வன் ரவீந்திரன், யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவி செல்வி சாந்தினி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி செல்வி சிவாஜினி, பரியோவான் கல்லூரி மாணவன் சரவணபவன் ஆகியோரின் அருமைத் தந்தையும்-

இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருகரும், பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி திருவருள் கணபதிப்பிள்ளையின் மைத்துனரும், சட்டத்தரணி திரு. குமாரசாமி கணபதிப்பிள்ளையின் சகலனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் 13-01-1986 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

11-1-86 தகவல்: இ. கணபதிப்பிள்ளை